21-09-2024.
E.P.No.258/2021 in O.S.No.91/2018

ம. சா. 1 பொன்னம்மாள் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தற்போது தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்று வீட்டில் இருந்து வருகிறேன். நான் பணிபுரியும் காலத்தில் மாதம் எனக்கு ரூ.3000 வருமானம் வரும். பணம் பெற்றது போக பாக்கி ரூ.19,39,327/- வரவேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்து உள்ளேன். எதிர்மனுதாரர் சிவில் என்ஜினியராக வேலைபார்த்து ரூ.1,00,000/- வருமானம் வருகிறது என்றும் மேலும் அவர் கொடைக்கானலில் பிருந்தாவன் பிரிப் இன் என்ற தங்கும் விடுதி கட்டி வாடகைக்கு விட்டு மாதம் ரூ. 4 லட்சம் வருமானம் வருகிறது என்றும் சொல்லி உள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் பேரில் உள்ள சொத்து ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். கொடைக்கானலில் பிருந்தாவன் பிரிப் இன் என்ற தங்கும் விடுதிக்கு மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த 6 ஆண்டுகளாக சீல் வைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த விவரங்களை நன்கு தெரிந்துகொண்டே அதை இம்மனுவில் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு விவசாயத்தின் மூலமாக வருமானம் வருகிறது என சொல்லி அதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்துள்ள நிலையில் சொத்து மீது நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றாலும் அவரை கைது செய்யச்சொல்லி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அது எனது விருப்பம். எதிர்மனுதாரரை கைது செய்யவேண்டும் என்ற மனுவை தள்ளுபடி செய்துவிட்டு அவர் சொத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.09.21 14:36:54 +0530

Principal District Judge,
Dindigul.